# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
## விரிவாக்கக் கல்வி இயக்ககம், சென்னை
## ICAR - வேளாண்மை அறிவியல் நிலையம், நாமக்கல் - 637 002

இதழ் 4 | **செய்தி மடல்** | எண் : 1

**ஜனவரி - மார்ச் 2019**



**முதன்மை ஆசிரியர்**

முனைவர் **டி. ராமசாமி**
இயக்குநர்,
விரிவாக்கக் கல்வி இயக்ககம்

**ஆசிரியர்**

முனைவர் **ந. அகிலா**
முதுநிலை விஞ்ஞானி
பேராசிரியர் மற்றும் தலைவர்

**இணை ஆசிரியர்**

முனைவர் **சு. சத்யா**
விஞ்ஞானி / உதவிப் பேராசிரியர்
மண்ணியல் மற்றும்
வேளாண் வேதியியல்

**ஆசிரியர் குழு**

முனைவர் **சி. ஷர்மிளா பாரதி**
முனைவர் **பெ. முருகன்**
திரு. **கோ.ரா. புஷ்பநாதன்**
மருத்துவர் **சி. கதிர்வேலன்**
முனைவர் **சி. பால்பாண்டி**
முனைவர் **மா. டெய்சி**




நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் விவசாயிகள், இளைஞர்கள், சுய உதவிக்குழுக்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து வெளிவரும் புதிய தொழில்நுட்பங்களை வயல் வெளிசோதனை, முதல்நிலை செயல்விளக்கம், விழிப்புணர்வு முகாம் மற்றும் அறிவுரைகள் வழங்குதல் மூலம் கொண்டு சேர்ப்பத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. விவசாயிகள், பண்ணை மகளிர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோர்களின் அறிவியல் சார்ந்த தொழில்நுட்பங்களின் பயன்பாட்டுத்திறனை மேம்படுத்தும் பொருட்டு வேளாண்மை அறிவியல் நிலையம் பல்வேறு வகையான பயிற்சிகள், விழிப்புணர்வு முகாம்கள், கண்காட்சிகள், செயல்விளக்கங்கள் மற்றும் வயல் விழாவினை நடத்தியது. ஜனவரி முதல் மார்ச் 2019 வரை வேளாண்மை அறிவியல் நிலையம் செய்த முக்கிய பணிகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

### 12-வது அறிவியல் ஆலோசனைக் குழுக் கூட்டம்



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தினுடைய 12-வது அறிவியல் ஆலோசனைக் குழுக் கூட்டம் 09.01.2019 அன்று வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தை கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்தார். இக்கூட்டத்தில் ஹைதராபாத் வேளாண்மை தொழில்நுட்ப பயன்பாட்டு ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் ஒய்.ஜி. பிரசாத், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் டி. இராமசாமி, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் எச். பிலிப், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர்முனைவர் பா. மோகன் தமிழ்நாடு கால்நடை மருத்துவக்கல்லூரி அறிவியல் பல்கலைக்கழக புத்தக வெளியீடு துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் நி.கு. சுதீப்குமார் அவர்களுடன் நாமக்கல் மாவட்ட வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத் துறை, பட்டு வளர்ச்சித் துறை, வேளாண் பொறியியல் துறை, மாவட்ட தொழில் மையம், மாவட்ட முன்னோடி வங்கி, ஆவின் மற்றும் அகில இந்திய வானொலி நிலையத்தைச் சார்ந்த அதிகாரிகளும் மற்றும் சிறு, பெரு விவசாய பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

அன்று முதலில் நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் கட்டப்பட்டுள்ள புதிய கால்நடைகளுக்கான ஆய்வகத்தை பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்கள் திறந்து வைத்தார். இக்கூட்டத்தில் கடந்த 2017 - 18 மற்றும் 2018 - 19 ஆண்டில் நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தால் மேற்கொள்ளப்பட்ட முதல்நிலை மற்றும் வயல்வெளிச் சோதனையில் வெற்றி கண்ட தொழில்நுட்பங்களும் காளான் உற்பத்தி மற்றும் இயற்கை விவசாயத்தில் வேளாண்மை அறிவியல் நிலையத்தால் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகளின் கண்காட்சி 21 விவசாயிகளால் அமைக்கப்பட்டு இருந்தது. அறிவியல் ஆலோசனைக் குழுக் கூட்ட உறுப்பினர்கள் இக்கண்காட்சியைப் பார்வையிட்டனர். இக்கூட்டத்தை வேளாண்மை அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி முனைவர் ந. அகிலா அவர்கள் வரவேற்று 11-வது அறிவியல் ஆலோசனைக் குழுக்கூட்ட பரிந்துரைக்கேற்ப மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும், கடந்த ஆண்டின் செய்பணி விபரங்கள் குறித்தும் எடுத்துரைத்தார். மேலும் இக்கூட்டத்தில் இந்நிலைய விஞ்ஞானிகள் கடந்த ஆண்டின் அவர்களது செய்பணி விபரங்கள் குறித்து எடுத்துரைத்தனர். 2015 - 18 வருடங்களில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் குறித்த கையேடு மற்றும் சுத்தமான பால் உற்பத்தி நாமக்கல் மாவட்ட விவசாயிகளின் விவரம் குறித்த குறுந்தகடுகள் இக்கூட்டத்தில்

பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்களால் வெளியிடப்பட்டது. மேலும் வெற்றிகரமாக வேளாண் மற்றும் சார்பு தொழில்களில் ஈடுபட்ட விவசாயிகள் கௌரவிக்கப்பட்டனர். இறுதியாக பல்கலைக்கழக துணைவேந்தரும் மற்றும் இதர குழு உறுப்பினர்களும் வேளாண்மை நிலையத்தின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கான பரிந்துரைகளை கூட்ட முடிவில் எடுத்துரைத்தார்கள்.

**வானொலி பண்ணைப்பள்ளி**



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையமும் அகில இந்திய வானொலி நிலையமும் இணைந்து "பருவநிலை மாற்றங்களுக்கேற்ற வேளாண்மை முனைப்புத் திட்டங்கள்" என்ற தலைப்பில் பண்ணைப்பள்ளியினை விவசாயிகள், ஊரக இளைஞர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் பயன்பெறும் வகையில் கடந்த நவம்பர் 2018 முதல் ஜனவரி 2019 வரை நடத்தியது.



பருவநிலையில் ஏற்படும் மாற்றத்தால் வேளாண்மை மற்றும் இதர துறையில் உண்டாகும் மாற்றங்கள், மானாவாரியில் மண்வள மேம்பாடு, வறட்சியை தாங்கி வளரக்கூடிய பயிர்கள், காய்கறி மற்றும் மலர் சாகுபடி குறிப்புகள், தானியங்கி வானொலி மையத்தின் செயல்பாடுகள், நீர் சேமிப்பு முறைகள், ஒருங்கிணைந்த பண்ணையத்தின் பயன்பாடுகள், கால்நடை பராமரிப்பு முறைகள், நிக்ரா திட்டம் வெற்றிகண்ட விவசாயியின் அனுபவம், பருவநிலை மாற்றங்களுக்கு ஏற்ற மீன் வளர்ப்பில் கடைபிடிக்க வேண்டிய அணுகுமுறைகள், தீவன மேலாண்மை, பூச்சி மேலாண்மை முறைகள், கடைசியாக பருவமாற்றத்திற்கேற்ற முனைப்புத்திட்டத்தில் கேள்வி - பதில் நிகழ்ச்சி ஆகிய தலைப்புகளில் பதிவு செய்த விவசாயிகளுடன் அகில இந்திய வானொலி நிலையம் பதிவு செய்து கொண்டது. பதிவு செய்த தலைப்புகள் 7-ம் தேதி நவம்பர் 2018 -லிருந்து 30-ம் தேதி ஜனவரி 2018 வரை ஒவ்வொரு புதன்கிழமை இரவு 7.25 மணிக்கு ஒலிப்பரப்பாகியது.

இந்நிகழ்ச்சியின் இறுதியில் பதிவு செய்த விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகளிடையே கலந்துரையாடல் நிகழ்ச்சி 11.03.2019 அன்று வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் வேளாண்மை அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் ந. அகிலா அவர்கள் இன்றைய சூழ்நிலைகளில் பருவநிலை மாற்றங்களுக்கேற்ற வேளாண்மை முனைப்புத் திட்டம் என்ற தலைப்பில் வானொலி பண்ணைப்பள்ளி நடத்துவதின் அவசியத்தை எடுத்துரைத்தார். நாமக்கல் கால்நடை மருத்துவ அறிவியல் கல்லூரி முதல்வர் மருத்துவர் பா. மோகன் அவர்கள் தலைமையுரை வழங்கி பதிவு செய்த விவசாயிகளுக்கு சான்றிதழ் வழங்கினார். திருச்சிராப்பள்ளி அகில இந்திய வானொலி நிலைய இயக்குநர் திரு. கே. நடராஜன் அவர்கள் சிறப்புரை வழங்கி வானொலி பண்ணைப்பள்ளி தொகுப்புகள் அடங்கிய புத்தகத்தை வெளியிட்டார். அகில இந்திய வானொலிப் பண்ணைப்பள்ளி நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் திரு. பி. சின்னுசாமி அவர்கள் வானொலி பண்ணைப்பள்ளி வகுப்புகளை பதிவு செய்து ஒலிப்பரப்பியதுடன் விவசாயிகளை வானொலி நிகழ்ச்சியினை கேட்குமாறு வலியுறுத்தினார். மேலும் இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கி வரும் ஆழியாரிலுள்ள தென்னை ஆராய்ச்சி நிலைய பேரா. முனைவர் டி. ராஜமாணிக்கம் அவர்கள் தென்னை சாகுபடி குறிப்புகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். மொத்தமாக 102 விவசாயிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயனடைந்துள்ளனர்.

**உலக மகளிர் தினம்**



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் 55 பயனாளிகளை கொண்டு உலக மகளிர் தினத்தை 08.03.2019 அன்று நடத்தியது. நிலையான சிந்தனை, ஆண்களுக்கு பெண்கள் சமம் என்ற எண்ணம், காலத்திற்கேற்றவாறு மாற்றிக்கொள்ளும் தன்மை ஆகிய முக்கிய அம்சங்களை கொண்டு இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது. மகளிர்களிடையேயுள்ள திறமையை வெளிக்கொணரும் வகையில் 5 வகையான போட்டிகள் நடத்தப்பட்டு சிறந்த மகளிருக்கு பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மகளிர்கள் தங்களுடைய தனிப்பட்ட திறமைகள் மற்றும் வாழ்க்கையினை சிறப்பாக கொண்டு செல்ல மேற்கொண்ட புதிய அணுகுமுறைகள் கொண்ட கருத்துக்களை மற்றும் கொள்கைகளையும் பகிர்ந்து கொண்டார்கள். 16 முதல் 60 வயதுக்குட்பட்ட வேளாண்மை அறிவியல் நிலைய பெண்மணிகள் அழைக்கப்பட்டு வேளாண்மை மற்றும் வருமானம் ஈட்டி தரும் தொழில்களில் சிறப்பாக செயல்பட்டமைக்காக கௌரவிக்கப்பட்டார்கள்.

**தேனீ வளர்ப்பிற்கான திறன் மேம்பாட்டு பயிற்சி**



இந்திய வேளாண்மை திறன் மேம்பாட்டு பயிற்சி கழகத்தின் நிதியுதவியுடன் வேளாண்மை அறிவியல் நிலையம் தேனீ வளர்ப்பிற்கான 200 மணி நேர பயிற்சியினை 28.11.2018 முதல் 11.01.2019 வரை 22 விவசாயிகளுக்கு நடத்தியது. இப்பயிற்சியில் தேனீயின் வகைகள், குணங்கள், செயல்பாடுகள், தேனீக்களின் வகைகளை கண்டறியும் முறைகள், தேனீப் பெட்டி கையாளும் முறைகள், ராணி தேனீயுடன் தேனீக்களை பிரித்து புதிய இடத்தில் தேன் கூடு அமைத்தல், தேன் கூடு அமைக்கும் முறைகள், தேனீ எடுக்கும் முறைகள், நோய் மற்றும் பூச்சி மேலாண்மை ஆகியன பயிற்றுவிக்கப்பட்டது. இத்துடன் ஈரோடு மாவட்டத்திலுள்ள சிவகிரியில் இந்தியன் தேனீ வகையும், திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள பாலப்பட்டி

கிராமத்தில் இத்தாலியன் தேனீ வகையும், ஓசூர் மாவட்டத்தில் கொசு தேனீ வளர்க்கும் முறைகளும் காண்பிக்கப்பட்டது. முடிவாக 08.03.2019 அன்று பயிற்சியாளர்களுக்கு தேர்வு நடத்தப்பட்டது. முனைவர் சி. ஷர்மிளா பாரதி, தோட்டக்கலை உதவிப் பேராசிரியர் மற்றும் முனைவர் ந. அகிலா முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் அவர்களால் இப்பயிற்சி நடத்தப்பட்டது.

**காளான் வளர்ப்பிற்கான திறன் மேம்பாட்டு பயிற்சி**



இந்திய வேளாண்மை திறன் மேம்பாட்டு பயிற்சி கழகத்தின் நிதியுதவியுடன் வேளாண்மை அறிவியல் நிலையம் காளான் வளர்ப்பிற்கான 200 மணிநேர பயிற்சியினை 18.12.2018 முதல் 20.02.2019 வரை 20 விவசாயிகளுக்கு நடத்தியது. பயிற்சி மற்றும் செயல் விளக்கத்தில் காளான் வளர்ப்பிற்கான முக்கியத்துவங்கள், காளான் வகைகள், கால சூழ்நிலை, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, அறுவடை, அறுவடைக்கு பின் தொழில்நுட்பங்கள், சேமிப்பு, மதிப்பூட்டுதல் ஆகிய தொழில்நுட்பங்கள் பயிற்றுவிக்கப்பட்டது. மேலும் பயிற்சியாளர்கள் பயன்பெறும் வகையில் கண்டுநர் சுற்றுலாவாக சிப்பி மற்றும் பால் காளான் வளர்க்கும் மற்றும் காளான் வித்து தயாரிக்கும் பண்ணைகள் அமைந்துள்ள இடங்களான அணியாபுரம், எலச்சிப்பாளையம், மோகனூர், மாவுரெட்டி மற்றும் புதுப்பட்டி கிராமங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பயனாளிகளுக்கு காளான் உற்பத்தி, பராமரிப்பு, அறுவடை, மதிப்பூட்டுதல் ஆகிய தொழில்நுட்பங்கள் முறையாக பயிற்றுவிக்கப்பட்டது. முனைவர் கே.ஆர். புஷ்பநாதன், உழவியல் துறை உதவிப்பேராசிரியர் மற்றும் முனைவர் ந. அகிலா முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் அவர்களால் இப்பயிற்சி நடத்தப்பட்டது.

**பூச்சிக்கொல்லி நஞ்சில்லா மிளகாய் உற்பத்தி - பண்ணைப்பள்ளி**



வேளாண்மை அறிவியல் நிலையம் பூச்சிக்கொல்லி நஞ்சில்லா மிளகாய் உற்பத்தி என்ற தலைப்பில் பண்ணைப்பள்ளியினை 25 விவசாயிகளை கொண்டு விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக்க தேர்ந்தெடுக்கப்பட்ட ஒண்டிக்கடை கிராமத்தில் 22.10.2018 முதல் 22.02.2019 வரை நடத்தியது. இப்பயிற்சியின் போது செடிகளின் குணாதியசங்கள், பருவநிலை மாற்றங்கள், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை, நடவு முறைகள், பயிர்களின் எண்ணிக்கை, உயிரியல் இடுப்பொருட்கள் கொண்டு பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, மஞ்சள் வண்ண பொறி மற்றும் இனக்கவர்ச்சிப் பொறி வைக்கும் முறைகள் அதன் பயன்பாடுகள், பஞ்சகாவியம், பூச்சி விரட்டி, பூண்டு மற்றும் மிளகாய் கரைசல் தயாரிக்கும் முறைகள், இலை வழியாக சூடோமோனாஸ் மற்றும் ட்ரைகோடெர்மா விரிடி மற்றும் பஞ்சகாவ்யம் தெளிக்கும் முறைகள், நீர் மற்றும் உர மேலாண்மை, அறுவடை, விற்பனை மற்றும் அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள் கற்பிக்கப்பட்டது. முடிவாக நஞ்சில்லா மிளகாய் உற்பத்தி முறைகள் முழுமையாக கொணரப்பட்டது.

**ஊரக இளைஞர்களுக்கான உயிரியல் இடுப்பொருட்கள் தயாரிக்கும் திறன் மேம்பாட்டு பயிற்சி**



அட்மா திட்ட நிதியுதவியுடன் நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையமும், வேளாண்மைத்துறையும் இணைந்து ஆறு நாட்கள் கொண்ட பயிற்சியாக 28.01.2019 முதல் 02.02.2019 வரை உயிரியல் இடுப்பொருட்கள் தயாரிக்கும் பயிற்சியினை பரமத்தி, எருமப்பட்டி, நாமக்கல், நாமகிரிப்பேட்டை, மோகனூர் வட்டாரத்தை சேர்ந்த 28 ஊரக இளைஞர்களுக்கு நடத்தியது. நாமக்கல் மாவட்ட வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு. ஜே. சேகர் துணை இயக்குநர் திரு. எஸ். வரதராஜன் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் ந. அகிலா அவர்கள் இப்பயிற்சியை துவக்கி வைத்து விவசாயிகளுடன் கலந்துரையாடினார்கள். உயிரியல் இடுப்பொருட்கள் தயாரிப்பில் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் பங்கு, முக்கியத்துவங்கள், பூச்சி மற்றும் நோய் மேலாண்மையில் உயிரியல் இடுப்பொருட்களின் பங்கு, ட்ரைகோடெர்மா விரிடி, சூடோமோனாஸ், ப்ளூரசன்ஸ், மெட்டாரைசியம், அனிசோபில்லோ, பிவேரியா பேசியானம், வெர்ட்டிசிலியம் லகானி தயாரிக்கும் முறைகள், பப்பாளியில் மாவுப்பூச்சியை கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணி தயாரிக்கும் முறைகள், தரம் மற்றும் பயன்பாட்டு முறைகள், பூச்சி மேலாண்மையில் இனக்கவர்ச்சி பொறிகளின் பங்கு, உயிரியல் இடுப்பொருட்களின் தரம் மற்றும் விற்பனை பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. இயற்கை முறையில் திரவ வடிவ உயிரியல் இடுபொருட்கள் தயாரிக்கும் முறைகள் பற்றிய செயல்விளக்கமும் செய்து காண்பிக்கப்பட்டது. இத்துடன் பயனாளிகள் கண்டுநர் சுற்றுலாவிற்கு ஒண்டிக்கடை கிராமத்திலுள்ள இயற்கை விவசாய பண்ணைக்கும், சேலத்திலுள்ள உயிரியல் இடுப்பொருட்கள் தயாரிக்கும் ஆய்வகத்திற்கும் ஏத்தாப்பூரிலுள்ள மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையத்திற்கும் அழைத்து செல்லப்பட்டனர். உயிரியல் இடுப்பொருட்கள் தயாரிக்கும் முறைகள் மற்றும் பயன்படுத்தும் முறைகள் குறித்த கையேடும் மற்றும் சான்றிதழ்களும் நிறைவு நாளன்று வழங்கப்பட்டது.

**வயல் விழா - நிலக்கடலை**



தொகுப்பு முதன்நிலை செயல்விளக்கத்தின் கீழ் நிலக்கடலை இரகம் டி.சி.ஜ.எஸ் 1073 செயல்திறனை காண்பிக்கும் பொருட்டு வயல்விழா 28.03.2019

அன்று எருமப்பட்டி வட்டாரத்தை சேர்ந்த திப்ரமாதேவி கிராமத்தில் நடத்தப்பட்டது. வேளாண்மை அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் ந. அகிலா அவர்கள் மாறிவரும் பருவநிலை மாற்றங்களுக்கேற்றவாறு வறட்சியை தாங்கி வளரக்கூடிய நிலக்கடலை இரகங்களை பயிரிடுவதின் அவசியத்தை எடுத்துரைத்தார். வேளாண்மை அறிவியல் நிலைய உழவியல் துறை உதவிப்பேராசிரியர் அவர்கள் புதிய நிலக்கடலை இரகத்தின் குணாதிசயங்களை பற்றியும், அதற்குரிய ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்தும் எடுத்துரைத்தார். 52 நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள் திப்ரமகாதேவி கிராமத்திலிருந்து பங்கேற்றனர். விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகளிடையே கருத்து பரிமாற்றமும் மேற்கொள்ளப்பட்டது. இந்த செயல்விளக்கத்தின் மூலம் பயனடைந்த விவசாயி மற்ற விவசாயிகளிடையே தனது கருத்துக்களை பகிர்ந்து கொண்டார். அவர் மகசூலாக எக்டருக்கு 1713 கிலோவும், நிகரலாபமாக ரூபாய் 52350-ம் நிலக்கடலை கொடி எடையில் 3955 கிலோவும் பெற்றுள்ளார்.

**வயல் விழா - நாற்று முறையில் சி.வெங்காயம் உற்பத்தி**



வேளாண்மை அறிவியல் நிலையமும், தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சிக்கான மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து 21.02.2019 அன்று திப்ரமகாதேவி கிராமத்தில் சின்ன வெங்காயம் இரகம் கோ - 5 கொண்ட வயல் விழாவினை நடத்தியது. இந்நிகழ்ச்சியில் வேளாண்மை அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் ந. அகிலா அவர்கள் மாறிவரும் பருவ காலங்களில் விதை மூலம் உற்பத்தி செய்யக்கூடிய சின்ன வெங்காயம் இரகம் கோ - 5 முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். மேலும் வேளாண்மை அறிவியல் நிலைய தோட்டக்கலை உதவிப்பேராசிரியர் முனைவர் சி. ஷர்மிளாபாரதி அவர்கள் சாகுபடி குறிப்புகளை தெளிவாக எடுத்துரைத்தார். கோயம்புத்தூர் தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவன தொழில்நுட்ப அலுவலர் திருமதி. சி. தேவி மற்றும் திரு. கே. சரவணன் அவர்கள் கலந்து கொண்டனர். மொத்தமாக 27 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

**பிரதான் மந்திரி கிஸான் சம்மான் நிதிதிட்டம்**



வேளாண்மை அறிவியல் நிலையம் 24.02.2019 அன்று பிரதான் மந்திரி கிஸான் சம்மான் நிதித்திட்டத்தை பற்றிய பிரதம மந்திரியின் உரையை ஊடகம் வழியாக விவசாயிகளுக்கு ஒலிப்பரப்பும் நிகழ்ச்சியை நடத்தியது. இந்நிகழ்ச்சியில் வேளாண்மை அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் ந. அகிலா அவர்கள் இக்கூட்டத்தை வரவேற்று பேசினார். மாண்புமிகு நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் அவர்கள் மற்றும் நாமக்கல் சட்ட மன்ற உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி மோகனூர் வட்டாரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார். மேலும் இந்நிகழ்ச்சியில் நாமக்கல் மாவட்ட வனத்துறை அலுவலர் மருத்துவர் ஆர். காஞ்சனா, எருமப்பட்டி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் திருமதி எம். புவனேஸ்வரி மற்றும் மோகனூர் வட்டாரத்தை சார்ந்த வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் திருமதி சி. கலைச்செல்வி கால்நடை உதவி மருத்துவர் ஆர். காளிமுத்து அவர்கள் கலந்து கொண்டு கிஸான் சம்மன் நிதித்திட்டத்தை பற்றி எடுத்துரைத்தார்கள். பிரதம மந்திரியின் மனதின் குரலும் மற்றும் கிஸான் சம்மான் நிதித்திட்டத்தின் துவக்கவிழாவும் நேரடியாக விவசாயிகளுக்கு நேரடி ஒளிப்பரப்பு செய்யப்பட்டது. தமிழ்நாடு வேளாண் இயக்குநர் அவர்களின் கருத்துக்களும் ஒளிப்பரப்பப்பட்டது. மொத்தமாக 147 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

**மழைமானி வழங்குதல்**



வேளாண்மை அறிவியல் நிலையமும், நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய தீவன பகுப்பாய்வு மையமும் இணைந்து வேளாண்மை அறிவியல் நிலையத்தால் தேர்வு செய்யப்பட்ட முன்னோடி விவசாயிகளுக்கு மழைமானியின் பயன்பாட்டைப் பற்றி எடுத்துரைக்கும் வண்ணம் 25.02.2019 அன்று கூட்டத்தை நடத்தியது. இதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக துணைவேந்தர், நாமக்கல் மாவட்டத்தின் 15 வட்டாரங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 26 விவசாயிகளுக்கு 01.03.2019 அன்று மழைமானியினை வழங்கினார்.

**விவசாயிகளை கௌரவித்தல்**



நாமகிரிப்பேட்டை வட்டாரத்திலுள்ள அரியாகவுண்டம்பட்டி கிராமத்தை சேர்ந்த திரு. பி. சரவணன் அவர்கள் பண்ணை இயந்திரங்களை விவசாயத்தில் பயன்படுத்தியமைக்காக சிறந்த விவசாயிக்கான விருதினை கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்களிடமிருந்து 15.02.2019 அன்று பெற்றார். மேலும் அவர்களுக்கு கொடி வகைக் காய்கறிப் பயிர்களில் இயற்கை வேளாண்மையை கடைப்பிடித்தமைக்காக சிறந்த விவசாயிக்கான விருதினை இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழக பொது இயக்குநர் அவர்களிடமிருந்து தேசிய அளவிலான பூசா கிரிஷி விக்யான் மேளா 2019 விழாவில் 07.03.2019 அன்று பெற்றார்.

**நாட்டுக்கோழி வளர்ப்பதற்கான சிறப்புப் பயிற்சி**

இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையின் நிதியுதவியுடன் நாமக்கல் மாவட்டத்தில் புறக்கடை நாட்டுக்கோழியிலிருந்து தரமான முட்டைகளை உற்பத்தி செய்தல் குறித்த திட்டத்தின் கீழ்

கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய கோழியின துறையின் மூலமாக நாட்டுக்கோழி வளர்ப்பதற்கான மூன்று சிறப்புப்பயிற்சிகள் 24.01.2019, 27.02.2019 மற்றும் 13.03.2019 அன்று 147 விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் கோழி வளர்ப்பதற்கான நவீன தொழில்நுட்பங்கள், தீவனம் தயாரிக்கும் முறைகள், தடுப்பூசி இடும் முறைகள் குறித்த செயல் விளக்கம் காண்பிக்கப்பட்டது. மேலும் விவசாயிகள் நாமக்கல் கால்நடை மருத்துவ அறிவியல் கல்லூரியில் உள்ள கோழிப்பண்ணைகள் மற்றும் குஞ்சுப் பொறிப்பான் ஆகிய இடங்களுக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.



**கட்டணப் பயிற்சிகள்**

வேளாண்மை அறிவியல் நிலையம் மண் பரிசோதனையின் அவசியம் மற்றும் மண்வளத்தை மேம்படுத்தும் உத்திகள் என்ற தலைப்பில் மூன்று ஒரு நாள் பயிற்சியினை 22.01.2019, 07.02.2019 மற்றும் 08.02.2019-தேதிகளில் நாமக்கல் முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியைச் சார்ந்த 109 மாணவர்களுக்கு நடத்தியது. இப்பயிற்சியில் மண் பரிசோதனைகளின் முக்கியத்துவங்கள், மண்வள மேம்பாட்டு உத்திகள், மண் மாதிரி எடுக்கும் முறைகள், அமில காரத்தன்மை, உப்புத்தன்மை, அங்ககக்கரிமம், எளிதில் கிடைக்கக்கூடிய சத்துக்களை கண்டறியும் வழிமுறைகள் கற்றுதரப்பட்டது.



மேலும் அறிவியல் ரீதியான கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு அடங்கிய தலைப்பில் 6 கட்டண பயிற்சிகள் 145 விவசாயிகளுக்கு நடத்தப்பட்டது. 15.11.2018, 03.12.2018, 22.01.2019, 25.01.2019, 11.02.2019 மற்றும் 22.03.2019 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்ட பயிற்சியில் தீவன மேலாண்மை, நோய் மேலாண்மை, பராமரிப்பு முறைகள் எடுத்துரைக்கப்பட்டது.

**உள்ளிடப்பயிற்சிகள்**

கடந்த ஜனவரி முதல் மார்ச் 2019 வரை 13 உள்ளிடப்பயிற்சிகளை 215 விவசாயிகளுக்கு வழுங்கியது. பயறுவகைப் பயிர்களின் உற்பத்தி, ஒருங்கிணைந்த பண்ணையம், மல்லிகை, சம்மங்கி, சாமந்தி, துளுக்க சாமந்தி சாகுபடி குறிப்புகள், வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் ஊட்டச்சத்து மேலாண்மை, மரவள்ளி மற்றும் சின்ன வெங்காயத்தில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும நோய் மேலாண்மை, கறவை மாடு வளர்ப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பு, கூட்டு கெண்டை மீன் வளர்ப்பு ஆகிய தலைப்புகளில் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.



**வெளியிடப்பயிற்சிகள்**

வேளாண்மை அறிவியல் நிலையம் கால சூழ்நிலைகள் மற்றும் விவசாயிகளின் தேவைக்கேற்ப ஆறு வெளியிடப்பயிற்சிகள் 210 விவசாயிகளைக் கொண்டு விவசாய நிலங்களில் நடத்தியது. வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை பராமரிப்பு, மீன் வள துறைகள் முக்கிய பிரச்சினைகள் மற்றும் தீர்வுகளும் பயிற்சிகள் அளிக்கப்பட்டது.



**மண்டல மாதாந்திர பணிமனைக் கூட்டம்**

வேளாண்மை அறிவியல் நிலையம் 14.02.2019 அன்று வேளாண்துறையை சார்ந்த களப்பணியாளர்களுக்கு மண்டல மாதாந்திர பணிமனைக் கூட்டத்தை நடத்தியது. இக்கூட்டத்தில் பல்வேறு வட்டாரங்களிலுள்ள பிரச்சினைகள் குறித்தும் அதற்கேற்ற தீர்வுகளும் விவாதிக்கப்பட்டது.



**மண் மற்றும் நீர் பரிசோதனை மற்றும் மண் வள அட்டை வழங்குதல்**

வேளாண்மை அறிவியல் நிலையம் ஜனவரி முதல் மார்ச் 2019 வரை 259 மண் மாதிரிகளும் 100 நீர் மாதிரிகளும் விவசாயிகளிடமிருந்து பெற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் முடிவில் 259 மண்வள அட்டைகளும் 100 பாசன நீர் வள அட்டைகளும் பரிந்துரைகளுடன் வழங்கப்பட்டது. மண் வளத்தை மேம்படுத்த ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகத்தை கடைப்பிடிக்க வலியுறுத்தப்பட்டது.



**கண்டுநர் சுற்றுலா - பட்டறிவு பயணம்**

கடந்த ஜனவரி முதல் மார்ச் 2019 வரை 403 (253 விவசாயிகள், 45 மாணவர்கள், 105 கால்நடை பராமரிப்பாளர்கள்) நாமக்கல் மாவட்டத்தின் பல்வேறு பகுதியிலிருந்து வேளாண்மை அறிவியல் நிலையத்தை பார்வையிட்டார்கள். வேளாண்மை அறிவியல் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள வேளாண் மாதிரி திடல், கால்நடை மற்றும் மீன் வளர்ப்புகேற்ற பண்ணைகள் பற்றிய செயல்விளக்கமும், அறிவியல் நிலையத்தின் செயல்பாடுகள் குறித்த தொழில்நுட்ப உரையும் வழங்கப்பட்டது.



| வயல் வெளிச்சோதனையின் முடிவுகள் 2018–2019 | | | |
|---|---|---|---|
| வ. எண். | தலைப்பு | கிராமம் மற்றும் திடல்களின் எண்ணிக்கை பரப்பளவு | சோதனையின் முடிவுகள் |
| 1. | நாமக்கல் மாவட்டத்திலுள்ள கொல்லிமலை வட்டாரத்திற்கேற்ற நெல் இரகங்களை ஆய்வு செய்தல் | வாசலூர்பட்டி இலங்கியம்பட்டி 5 (2 எக்டர்) | அனஸ்வரா மற்றும் வயநாடு II இரகங்களை ஒப்பிடுகையில் சுப்ரியா நெல் இரகம் அதிக உயரம் (61.8 செ.மீ) செடிக்கு அதிக விளைச்சல் தரும் தூர்களின் எண்ணிக்கை (14.2) குறைவான நோய் தாக்கம், அதிக தானிய மகசூல் (3332 கிலோ / எக்டர், வைக்கோல் எடை (4275 கிலோ / எக்டர்) மற்றும் நிகர இலாபமாக எக்டருக்கு ரூ. 27462 கிடைக்கப்பெற்றுள்ளது. |
| 2. | நாமக்கல் மாவட்டத்திற்கேற்ப ஆமணக்கு இரகத்தினை ஆய்வு செய்தல் | கோக்கலை உஞ்சனை 5 (2 எக்டர்) | டி.சி.எச் 519 மற்றும் ஒய்.ஆர்.சி.எச் 1 இரகங்கள் டி.சி.எச் 177 இரகத்தை ஒப்பிட்டு பார்க்கையில் செடிக்கு அதிக காய்களின் எண்ணிக்கை, குறைவான பூச்சி மற்றும் நோய் தாக்கம் மற்றும் அதிக மகசூல் பதிவாகியுள்ளது. |
| 3. | நாமக்கல் மாவட்டத்திற்கேற்ப பீர்க்கன் இரகங்களை தேர்வு செய்தல் | ஒண்டிக்கடை 5 (2 எக்டர்) | கோ. எச் 1 இரகமானது அர்கா விக்ரம் (27.2 டன் / எக்டர்) மற்றும் தனியார் இரகங்களுடன் (26.3 டன் / எக்டர்) ஒப்பிடுகையில் அதிக மகசூல் (29.6 டன் / எக்டர்) கொடுத்துள்ளது. |
| 4. | கழிவுகளை மட்க வைப்பதில் கூட்டு நுண்ணுயிர்க் கலவையின் செயல் திறனை ஆய்வு செய்தல் | மூலக்காடு கணபதிபாளையம் 10 (0.4 எக்டர்) | மூன்று மாதத்திற்குள் என்.சி.ஓ.எஃப் மட்கவைப்பான் டன்னுக்கு 678 கிலோ மட்கு உரமும், யூ.ஓ.எஸ் தார் வார்டு மட்க வைப்பான் 654 கிலோ மட்கு உரமும், டி.என்.ஏ.யு. கோயம்புத்தூர் மட்கவைப்பான் 634 கிலோ மட்கு உரமும் தந்துள்ளது. |
| 5. | நாமக்கல் மாவட்டத்திற்கேற்ற கறவைமாடுகளில் கருதங்காமை பிரச்சினையை நிவர்த்தி செய்யும் முறைகளை ஆய்வு செய்தல் | தோளூர் 10 (10 மாடுகள்) | சி.இ.டி.ஆர் தொழில்நுட்பம் அடிக்கடி கருத்தங்காமை பிரச்சனை உள்ள மாடுகளில் கன்றுகளை 12 - 14 மாதங்களில் ஈன்று எடுக்க ஏதுவாக உள்ளது |
| 6. | ஆடுகளில் ஒட்டுண்ணிகளை சரிசெய்ய மரபுசார் மூலிகை மருத்துவத்தின் பயன்பாட்டினை ஆய்வு செய்தல் | ஒண்டிக்கடை 10 (10 ஆடுகள்) | மரபுசார் மூலிகை மருத்துவத்தை பயன்படுத்துவதன் மூலம் ஆடுகளின் உடல் எடையானது 19 கிலோவும், என்.ஐ.எப் -ல் 18 கிலோவும் மற்றும் குடல் புழுக்களின் எண்ணிக்கை குறைவாகவும் உள்ளது. |


**மேலும் தகவலுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

முதுநிலை விஞ்ஞானி
பேராசிரியர் மற்றும் தலைவர்
ICAR - வேளாண்மை அறிவியல் நிலையம்
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும்
ஆராய்ச்சி நிலைய வளாகம்
நாமக்கல் - 637 002


ICAR - வேளாண்மை அறிவியல் நிலையம், நாமக்கல்

பெறுநர்

திரு./ திருமதி. ______________________

______________________

அனுப்புநர் ______________________

முதுநிலை விஞ்ஞானி, பேராசிரியர் மற்றும் தலைவர்
ICAR - வேளாண்மை அறிவியல் நிலையம்
நாமக்கல் - 637 002

இணையதளம் : www.kvknamakkal.com